## ★ மாணவர்களை கடத்திய இராணுவ அதிகாரிக்கு பதவி உயர்வு!

(கொழும்பு)
தெற்கில் எம்பிலிப்பிட்டிய வில் 31 சிங்கள மாணவர்கள் கடத்தப்பட்டு காணமற் போன சம்பவத்துக்கு காரண மாக இருந்த இராணுவ அதி காரி ஒருவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது என்று

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 23 இதழ் 271
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 08 — 11 — 1992

## தனியார் பஸ்வண்டி கண்ணிவெடியில் சிக்கியது

[மட்டக்களப்பு]
மட்டக்களப்பில் செங்க லடிப் பகுதியில் தனியார் பஸ் வண்டி ஒன்று நேற்று கண்ணி வெடியில் சிக்கியதாக அங்கி ருந்து வரும் செய்திகள் தெரி விக்கின்றன.

[4ம் பக்கம் பார்க்க]

## விமானத் தாக்குதலை நிறுத்த கோரிக்கை

(கொழும்பு)
தனது சொந்த நாட்டு மக்களையே துன்பப்படுத்தி யது என்ற கறை, சர்வதேச ரீதியில் இலங்கைமீது படியா திருப்பதற்காவது, வடக்கு கிழக்கு பிரதேசங்களில் வாழும் அப்பாவி மக்கள் மீதான கண்மூடித்தனமான

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ முப்படைகளும் விரைவில்

# வடக்கில் தாக்குதலை ஆரம்பிக்க புதிய யுக்திகள் தயாரிப்பு?

(கொழும்பு)
வடக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாதுகாப்பு படையினர் ஒருங்கிணைந்த நடவடிக்கையை புதிய உத்திகளோடு விரை வில் முன்னெடுக்க இருப்பதாக கூட்டுப்படைத் தலைமையக வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

இதற்கான திட்டங்களை கூட் டுப்படைத் தலைமைத் தளபதி ஜெனரல் ஹமில்டன்வனசிங்க படை அதிகாரிகளின் உதவி யுடன் தயாரித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித் தன.

வடபகுதியில் நடைபெற வுள்ள படை நடவடிக்கையின் போது பொதுமக்களின்பாதிப் பைத் தவிர்ப்பதில் கூடிய முக் கியத்துவம் கொடுத்து அதற் கேற்ப உத்திகள் வகுக்கப்பட் டுள்ளதாகவும் அவ்வட்டாரம்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ இவ் வருடம் மட்டும் 4000 இராணுவம் ஆயுதங்களுடன் தப்பி ஓட்டம்

(கொழும்பு)
இராணுவத்திலிருந்து இவ் வருடம் மட்டும் நாலாயிரத் திற்கும் மேற்பட்டோர் ஆயு தங்களுடன் தப்பி ஓடி மறைந் துள்ளதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவ்வருட ஆரம்பத்தைவிட நடுப்பகுதியிலேயே இவ்வாறு

[4ம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பில் ஊரடங்கு பாரிய தேடுதலுக்கு முஸ்தீபு

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத் தில் இன்று காலை 6 மணி முதல் காலவரையற்ற ஊர டங்குச்சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் நேற்றிரவு அறி வித்தது.

மட்டக்களப்பில் புலிகளுக்கு எதிராக பாரிய தேடுதல்களை மேற்கொள்ளும் நோக்கிலேயே இந்த ஊரடங்கு அமுல்படுத் தப்பட்டுள்ளதாகவும் முப் படைகளும் பெருமளவில் இப் பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டம் முழுவதிலும் ஒரே நேரத்தில ஊரடங்கு அமுலுக்கு வரு வது கடந்த பல மாதங்களின் பின் இதுவே முதல் தடவை

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பலம் கிழக்கில் அதிகரிப்பு

(கொழும்பு)
கிழக்கில் புலிகளின் தாக்கு தல்கள் அதிகரிக்கும் சாத்தி யம் அதிகரித்து வருவதாக படை வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

கிழக்கில் எல்லைக்கிராமங் களில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டுள்ளதால் ஏனைய

(4-ம் பக்கம் பார்க்க)

## டாக்காவில் சார்க் மாநாடு

(கொழும்பு)
7வது சார்க் உச்சிமாநாடு அடுத்தமாதம் பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் நடைபெறவுள்ளது.

இதற்கான அழைப்பை பங் களாதேஷ் நாட்டின் பிரதம

(4ம் பக்கம் பார்க்க)

## நள்ளிரவுவேளையில் கடும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வலி-வடக்கு, மேற்குப்பகுதி யில் படைமுகாம்களிலிருந்து தினமும் நள்ளிரவு வேளையில் கடும் ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக பலாலி, மாதகல்

(4-ம் பக்கம் பார்க்க)

## வங்கிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

(திருநெல்வேலி)
வங்கிகளில் உள்ள பதவி வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்காக பரீட்சை கள் இம்மாதம் 21-ம், 22-ம், 28-ம் திகதிகளில் யாழ்ப்பா ணம் வேம்படி மகளிர் கல் லூரியில் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பரீட்சையை யாழ்ப்பா ணத்தில் நடாத்த கொழும் பில் தங்கியுள்ள யாழ் அரச அதிபருக்கு உறுதியளிக்கப் பட்டுள்ளதாக அங்கிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த தந்திரங்களை வெளியிட அதிகாரிகளுக்கு அனுமதி மறுப்பு

(கொழும்பு)
வடக்கு- கிழக்கில் விடுத லைப் புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் இரா ணுவ நடவடிக்கைகளை குறி த்த யுத்த தந்திரங்களை எக் காரணம் கொண்டும் வெளியி டக்கூடாதென படை அதிகா ரிகளுக்கு கடும் உத்தரவு வழங் கப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக இரா ணுவத்தினர் மேற்கொள்ள வுள்ள தாக்குதல்கள் குறித்து பத்திரிகைகள் முன்கூட்டியே செய்திகளையும், கட்டுரைகளை

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு இணைப்பை தெரிவுக்குழு தொடர்ந்தும் எதிர்க்கும்!

[கொழும்பு]
வடக்கு-கிழக்கு இணைப்பை தெரிவுக்குழு தொடர்ந்தும் எதிர்க்குமெனவும் இதற்கேற் பவே அதன் தீர்வுத்திட்டம் அமையுமெனவும் தெரிவுக் குழு வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

திரு. மங்களமுனசிங்க முன் வைத்த திட்டத்தை தமிழ்க் கட்சிகள் ஒட்டுமொத்தமாக நிராகரித் ததையடுத்து புதிய திட்ட மொன்றை தயாரிக்கும் முயற்சியில் தெரிவுக்குழு ஈடு பட்டுவருகிறது.

புதிதாக தயாரிக்கப்படும்

(4-ம் பக்கம் பார்க்க)

## யுத்த இழப்பை இராணுவம் மறைக்கிறது

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில் இடம் பெறும் யுத்தத்தில் இறந்த, இறக்கின்ற இராணுவத்தின் உண்மையான தொகையை கூட்டுப்படைத் தலைமையகம் கூறுவதில்லை என்று கொழும் பிலிருந்து வெளிவரும் சிங்கள வாரப்பத்திரிகை ஒன்று குறிப் பிட்டுள்ளது.

இராணுவம் 20 அல்லது முப்

(4-ம் பக்கம் பார்க்க)

மரமதை நாட்டிட மழையது பொழியும்

## வரி விளம்பரம்

### அனுமதி பரீட்சை (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரிப் அனுமதி பரீட்சை 10-11-92 செவ்வாய் பி. ப 3 - 00 நடைபெறும். பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-2574]

### வெளிவந்துவிட்டது மார்க்கம்

சமூக பொருளாதார ஆய்வு சஞ்சிகை உயர்தர மாணவர்களுக்கும் வெளிவாரி பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உகந்தது. பன்னிரண்டு கட்டுரைகளை அடங்கியது, கிடைக்கும் இடம்: தினேஸ் புத்தகசாலை, 19 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (எ-2575)

### வினா-விடை

A/L விஞ்ஞான பாடங்களின் கடந்த கால வினா-விடைகள் விற்பனையாகின்றன.

'A' LEVEL CENTRE
1ம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(ஏ 2572)

### பல்கலைக்கழக ஊழியர் தின விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தின விழா, இம்மாதம் 11ம் திகதி புதன்கிழமை முற்பகல் 8-00 மணி தொடக்கம் பிற்பகல் 5-00 மணி வரை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

### இலவச நிவாரணம்

[அரியாலை]

யாழ். சுண்டுக்குளி புனித. யுவானியார் ஆலயச் சுற்றுடலில் புதிதாக இடம்பெயர்ந்து வந்து தங்கியுள்ள வறிய குடும்பங்களுக்கு, புனித. யுவானியார் ஆலயக் குருமனையில் வைத்து அரிசி, மா, பருப்பு, தேயிலை, அங்கர் பால் மா. லைவ்போய் சவர்க்காரம் ஆகியன வழங்கப்பட்டு வருகின்றன. (59)

### தையல் பயிற்சி வகுப்பு

(தாவடி)

நாகர்கோவில் கிராமத்தில் உள்ள யுவதிகளின் நன்மை கருதி. யாழ். மாவட்ட மனித முன்னேற்ற நடுநிலைய வடமராட்சி கிழக்குப் பிரிவினரால் இலவச தையல் பயிற்சி வகுப்பு ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. வாரத்தில் மூன்று நாட்கள் இவ்விலவச தையல் பயிற்சி வகுப்பு நடைபெறுகின்றது. (163)

## வைத்திய சேவை விஸ்தரிப்பு

முன்னுள் ஊர்காவற்றுறை மாவட்ட யாழ்.போதனு வைத்தியசாலை ஆகியவற்றில் கடமையாற்றிய Dr S பாலச்சந்திரன் தனது சேவையை விஸ்தரித்துள்ளார்.

இடம்: **பாபா கிளினிக்**
1ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக)

நேரம்: ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணியிலிருந்து பகல் 12 மணி வரை
மாலை 2 மணியிலிருந்து மாலை 6 மணிவரை

கிளை: சங்கானை பிளாக் வீதி
தினசரி காலை 7 - 8 மணி வரை
இரவு 7 - 8 மணிவரை

(ஏ- 2564)

## யாழ். போதனு வைத்தியசாலை

சாமுண்டிதேவி சமேத சிவஞானவைரவ சுவாமி
ஆலய புனருத்தாரண அஷ்ட பந்தன

## மகா கும்பாபிஷேகம்

நாள் - ஐப்பசி 24ம் நாள் 9-11-92 திங்கட்கிழமை
காலம்: காலை 9 மணி - பி. ப. 12. 30 மணிவரை
பிரதமகுரு: பண்டிதர்வித்துவான், சைவப்புலவர்
சிவத்திரு இ. நவரத்தினக்குருக்கள்
தலைமையில்

இதனைத் தொடர்ந்து அருளுரைகள்

1. நல்லை ஆதீன முதல்வர்
2. துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்
3. ஆத்மஜோதி திரு. நா. முத்தையா அவர்கள்
4. கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் அவர்கள்
5. தொழிலதிபர் திரு. க. கனகராசா அவர்கள்

ஈழத்தின் பிரபல நாதஸ்வர தவில்
வித்துவான்களின் மங்கள இசை
திருமுறை ஓதலும் இடம் பெறும்
அடியார்கள் அனைவரையும் வருகை தந்து
திருவருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்

**ஆலய பரிபாலன சபை**

(சி-6956)

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை.

### பதவி வெற்றிடம்

கீழே குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து மாத்திரம் 1992-12-4ம் திகதி வரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும்

**பதவி:** கருவிப்பொறிவலர் தரம் II.

**சம்பளத் திட்டம்:** ருபா 1865-11X40-23 5 மாதமொன்றுக்கு (இவை தவிர அரசாங்கத்தினுல் வழங்கப்படும் வாழ்க்கைச்செலவுப்படி உட்பட ஏனைய படிகளும் செலுத்தப்படும்)

**தகைமைகள்:-**

1. குறைந்த பட்சம் 8ம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2. "அமுக்கம்பதி கருவி" போன்ற துல்லிய மானிகளைப் பராமரிப்பதிலும், திருத்துவதிலும், அரசாங்கத் திணைக்களமொன்றிலோ, அரச கூட்டுத்தாபனமொன்றிலோ, அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் நிறுவனமொன்றிலோ குறைந்த பட்சம் ஐந்தாண்டு அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

**தெரிவு:** தொழிற்தேர்வின் மூலமும், நேர்முகப் பரீட்சை மூலமும்.

**குறிப்பு:** தொழில் நுட்பக் கல்லூரியொன்றிலிருந்து பெறப்பட்ட தொழில் சான்றிதழை வைத்திருப்பவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:** 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை நேரிலோ அல்லது சுய முகவரியிடப்பட்ட முத்திரையொட்டிய 23 X 10 செ. மீ. அளவுடைய உறைகளை அனுப்பி தபால் மூலமாகவோ பெற விரும்புவோர், இப்பல்கலைக்கழகத்திலுள்ள சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/தாபனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்

குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992-10-30 (எ-2571)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு புதிய நிவாரண அட்டை வழங்க ஏற்பாடு

(பண்டத்தரிப்பு)

வலி. தென்மேற்குப் பிரதேசத்தில் இராணுவ நடவடிக்கையினுல் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குப் புதிய நிவாரண அட்டைகள் அவ்வப் பிரிவு கிராமசேவை அலுவலர்களினுல் வழங்கப்பட்டு வருகின்றன.

இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் குடும்பப் பதிவு அட்டை, நிவாரண அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைத் தத்தமது பிரிவுக் கிராமசேவை அலுவலர்களிடம் சமர்ப்பித்து புதிய நிவாரண அட்டைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (72)

## 3ம் தவணை பரீட்சை 30ம் திகதி ஆரம்பம்

(திருநெல்வேலி)

பாடசாலைகளுக்கான 3-ம் தவணை வகுப்பேற்றப் பரீட்சைகள் மீண்டும் யாழ். கல்வித் திணைக்களத்தினுல் நடாத்தப்பட உள்ளது. இப்பரீட்சைக்கான வினுத்தாள்கள் அச்சிடப்பட்டு வருகின்றன.

மூன்றும் தவணைப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 30-ம் திகதி முதல் ஆரம்பமாகி டிசம்பர் மாதம் 3-ம் திகதியுடன் முடிவடையும் என கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

டிசம்பர் மாதம் 5-ம் திகதி பாடசாலைகள் மூன்றும் தவணை விடுமுறைக்காக மூடப்படும் எனவும் டிசம்பர் 7-ம் திகதி க. பொ. த (சாதாரண தரம்) பரீட்சைகள் ஆரம்பமாகும் எனவும் அவர் தெரிவித்தார். (157)

## பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவுசபை கொழும்பிலிருந்து கொண்டு வரப்படும் பொருள்களுக்கு கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்துள்ளது.

இனிமேல் சகலபலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விலையிலேயே பொருள்களை விற்பனை செய்யவேண்டும்.

எனினும் அரசினூடாக (அரசாங்க அதிபர் மூலம்) எடுத்துவரப்படும் பொருள்கள் குறைந்த விலையில் விநியோகிக்கப்படும்.

நாட்டரிசி 28-00, தீட்டல் பச்சை 28-00, உடையல் 27-00 சீனி 35-00, தேங்காய்எண்ணை 55-00, மல்லி 65-00, சன்லைட் 8-50 லக்ஸ் (நியூ) 9-50, லக்ஸ் 9-00, 9 20, லைபோய் 8-50, ராணி 10-00, மண்ணெண்ணை 40-00. லக்ஸ்பிறே 72-50. நெஸ்பிறே 64-00, அங்கர் 65-00, உழுந்து 45-00, உ. பருப்பு 45-00, பயறு 28-00. (150)

## விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

கைதடி சைவச் சிறுவர் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை திங்கட்கிழமை 09-ம் திகதி காலை கைதடி நவீல்ட் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

## கேள்வி கோரல்

### சுகாதாரத் திணைக்களம் யாழ்ப்பாணம்

சுகாதார வைத்திய அதிகாரிகளின் பிரிவில் நியமிக்கப்பட்டுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தற்காலிக மலசல கூடங்கள் அமைப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் அரச நிறுவனங்கள் அல்லது உள்ளூராட்சி ஆணையாளரின் நிறுவனங்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகின்றன. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை 19-11-92ம் திகதி நண்பகல் 12 மணிவரை இப்பணிமனையில் ரூபா 50ஐ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 20.11-92ம் திகதி மு. ப. 10-00மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றே திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பினுல் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் அரக்கு முத்திரையிடப்பட்ட உறையில் வைக்கப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மலசலகூடம் அமைப்பதற்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டு பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ அவ்வலுவலகத்திலுள்ள பெட்டியிலோ சேர்க்கப்படலாம்.

வைத்திய கலாநிதி பொ. இரத்தினசபாபதி,
பிராந்திய பணிப்பாளர்.

சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை, 05-11-92
இல: 59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (எ- 2567)

# சீனவும், பாகிஸ்தானும் அணு ஆயுத உற்பத்தியில்

# இந்தியாவுக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளன!

(வாஷிங்டன்)

அணு ஆயுதங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை இந்தியாவும், அமெரிக்காவும் எதிர்வரும் 12-ம், 13-ம் திகதிகளில் வாஷிங்டனில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளன.

இதில் இந்தியாவை எதிர் நோக்கும் அணு ஆயுத அச்சுறுத்தல்கள் பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளன.

மேலும் கடந்த ஜூன் மாதம புதுடில்லியில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் எந்த அளவுக்குச் செயலாக்கம் பெற்றிருக்கின்றன என்பதும் இதில் தெளிவுபடுத்தப்படும்.

அமெரிக்கா, பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகள் ஓராண்டு காலத்திற்கு அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தி வைப்பதற்கு இசைவு தெரிவித்திருந்தன.

1997-ம் ஆண்டு முதல் அமெரிக்கா அணுவாயுதப் பரிசோதனைகளை முழு அளவில் நிறுத்திவிட வேண்டும் என்ற தீர்மானம் ஒன்றை அமெரிக்கக் காங்கிரஸ் கொண்டு வந்துள்ளது. எனினும் இது சாத்தியமாவது சாவதேச நிலவரங்களைப பொறுத்துள்ளது.

மேற்கத்தைய நாடுகள் பலவற்றில் இந்த அம்சம் ஒரு பிரச்னையாகவே எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

இதுவரை தெரியவந்துள்ள தகவல்களின்படி அமெரிக்கா அணு ஆயுத உற்பத்தியை மேற்கொள்ளாது எனவும், அணு ஆயுதத் தயாரிப்புகளுக்குத் தேவைப்படும் 'றேடியம்' என்ற மூலப்பொருளைக் கூட உற்பத்தி செய்யாது என்றும் தோன்றுகிறது.

ஆனல் இந்தியாவின் அயல் நாடான சீன அணு ஆயுதக் குறைப்புத் திட்டத்தில் ஈடுபடாமல் தொடர்ந்து அணு ஆயுதபரிசோதனைகளை நடத்தி வருகிறது.

இதேவேளை அணு ஆயுத உற்பத்திக்குத் தேவையான உதவிகளையும், தொழில்நுட்ப ஆலோசனைகளையும் சீன பாகிஸ்தானுக்கு வழங்கிவருகிறது

சீனவும், பாகிஸ்தானும் இன்னமும் இந்த அம்சத்தில் நெருங்கிய தோழர்களாகவே செயல்பட்டு வருகின்றன

கடந்த வருடம் அமெரிக்க சட்டமன்றத்தில் செனேட்டர் ஜோன் வைன் பேசுகையில்: சீனவின் இந்தப்போக்கு இந்தியாவுக்கு அச்சுறுத்தலாகும். இது அயல் நாடுகளின் சுமுகமான உறவுகளுக்குப் பாதகம் விளைவிக்கும் என்று தெரிவித்தார்.

சீனவின் அணு ஆயுதப் பரிசோதனை அதிகரிப்பைக் கண்டு ஜப்பானும், தென்கிழக்காசிய நாடுகளும் கவலை கொண்டுள்ளன.

சீன அமெரிக்கா அடங்கலான ஐந்து நாடுகளைக் கொண்ட ஒரு மாநாடு நடைபெற்றபோது பாகிஸ்தான் பரிந்துரை செய்ததன் பேரில் இந்த மாநாட்டின் மைய நாயகனுக சீன உருவானது. எனினும் இதை இந்தியா ஏற்கவில்லை.

சீனவுடன் எல்லைப் பிரச்னைகள் நீடிக்கும் நிலையில் இது இந்தியாவுக்குப் பெரும் பிரச்னையாகவே அமைந்துவிட்டது.

சீன தொடர்ந்து தனது அணு ஆயுதப் பரிசோதனைகள் மூலமும் பாகிஸ்தானுக்கு உதவுவதன் மூலமும் இந்தியாவை அச்சுறுத்தி வருகின்றதென்பதை உலகம் நன்கறியும்

இந்தியாவும் முள்ளை முள்ளால் எடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்பதைச் சீன மறந்துவிட்டது துரதிர்ஷ்டவசமானதாகும்.

டாக்டர் பாபா போன்ற இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானிகள் இந்தியா அணு ஆயுதங்களை தயாரிக்க வேண்டும் அதற்குரிய அனைத்துச் சக்திகளும் இந்தியாவிடம் உண்டு எனறு தெரிவித்துள்ளனர்.

ஒரு காலகட்டத்தில் அப்போதைய பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவசியமானல் அணு ஆயுதங்களைப் பெறுவதில் தவறில்லை என்ருர். (இ)

## இன்று

(உடுவில்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினரால் நடாத்தப்படும் இவ்வாண்டுக்கான சைவ சமய பாட பரீட்சை இன்று 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

சைவ சமய பாடத்துக்கு ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரையான மாணவர்களும் ஆண்டு 12, 13 மாணவர்கள் இந்து நாகரீக பாடத்துக்கும் பரீட்சைக்கு தோற்றுவர். (109)

0 0 0

(உடுவில்)

கொழும்பு விவேகானந்த சபையினரால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் சைவ சமய பாடப் பரீட்சை இன்று 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அகில இலங்கையிலும் நடைபெறுகின்றது. (109)

3 0 0

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மீய மேம்பாட்டுக் கழகத்தின் நல்லூர் பிரதேச செயலகத்தில் தொழிற்பரப்புக்குட்பட்ட உற்பத்திக்குழுக்களின் எல்லா செயற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம் இன்று 8ம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு நல்லூர் சாதன பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (161)

0 0 0

(யாழ்ப்பாணம்)

பாலர் கல்விக் கழகத்தின் 26வதுஆண்டின் 16 பாடசாலைகளின் பெற்றோர் தின விழாவும் கலைநிகழ்ச்சியும் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (க)

0 0 0

(யாழ்ப்பாணம்)

தத்துவஞான ஆசிரியர் திரு. த. சத்தியதாஸன் எழுதிய பகவான் ஸ்ரீசத்யசாயி பாபாவின் "நான் யார்?" நான் கடவுள்? என்னும் ஆத்ம தத்துவஞான உரைகள் அடங்கிய நூல் வெளியீட்டு வைபவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணியளவில், உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க நிலையத்தில் வைத்திய கலாநிதி திரு. வ. சின்னப்பு தலைமையில் நடைபெறும்.

அன்றையதினம் சைவ சித்தாந்த வேதாந்த விரிவுரை நிகழ்ச்சிகளும் நடாத்தப்படும்.

## மரம் நடுகையும் சிரமதானமும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரால் சிரமதானமும் மரக்கன்றுகளின் நடுகையும் மேற்கொள்ளப்பட்டன.

மாவீரர் துயிலும் இல்ல வேலி ஓரங்களில் வேம்புமரக் கன்றுகளும் இராஜவீதியின் இருபுறமும் சவுக்கு மரக்கன்றுகளும் இவ்வைபவத்தின் போது நாட்டப்பட்டன.

## இராசி பலன்

08-11-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 23)

திரயோதசி பி.ப. 2-26வரை ரேவதி பி. ப. 5-49 வளர, அமிர்தயோகம், சுபநேரம் காலை 9-05 முதல் 10-35வரை, இராகு காலம் மாலை 4-35 முதல் 6-05 வரை.

மேடம்: பொறுமை இழத்தல், மனப் போராட்டம், வெறுப்பு

இடபம்: அநாவசியதலையீடு, கடன்படல், விரோதம்,

மிதுனம்: ஊதிய உயர்வு, பிறர் ஆதரவு, வாக்குத்திறமை

கடகம்: வாழ்க்கை வசதி. காரிய சித்தி, பணவரவு.

சிங்கம்: தொழில் முரண்பாடு, அதிக பிரயாசம், தடுமாற்றம்.

கன்னி: திறமைக் குறைவு, தொழில் சோம்பல், மனக் கவலை.

துலாம்: விட்டுக்கொடுத்தல், குடும்பசுகம், பிறர் ஆதரவு.

விருச்சிகம்: பலனுள்ள முயற்சி, தெய்வ தரிசனம், விருந்து வைபவம்.

தனுசு: முன்கோபம், பிறர் துன்பம், மனநிம்மதியின்மை.

மகரம்: உடல் உபாதை, மாமனர்கவலை, காரியத்தடை.

கும்பம்: சுபகாரியம், புத்திரர் பெருமை, நல்லசெய்தி.

மீனம்; குடும்பவேற்றுமை, அதிக பிரசங்கம், அகால போஜனம்.

— ஜோஸ்பர்

## புல்முளைத் தண்டுகள்

(யாழ்ப்பாணம்)

கால்நடைத் தீனிக்காக புல்வகை முளைத் தண்டுகள் இலவசமாக மில்க்வைற் நிறுவனத்தால் வழங்கப்படுகின்றன. கால்நடை வளர்ப்போர் எழுத்துமூல விண்ணப்பத்துடன் நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என மில்க்வைற் அதிபர் தெரிவித்துள்ளார். (அ)

## புற்றுநோய் போட்டி

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவர்களிடையேயான புற்றுநோய் வினு-விடைப் போட்டி ஒன்று இம்மாதம் 15-ம் திகதி காலை யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும், (159)

## அன்பளிப்பு

(உடுவில்)

யாழ்ப்பாணம் பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்திற்கு பத்தாயிரம் ரூபா அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளார்.

இப்பாடசாலையின் வளத்தை மேலும் மேம்படுத்துவதற்காக பத்தாயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்வதாக அவர் தெரிவித்தார். (109)

## மாவீரர் நினைவாக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(தாளையடி)

மாவீரர் நினைவாக தாளையடி செல். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட ஏழு பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வடமராட்சி கிழக்கிலுள்ள இருபது விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியில் உடுத்துறை, செந்தமிழ் விளையாட்டுக் கழகம், வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை 4:3என்ற கோல்கள் அடிப்படையில் வெற்றிபெற்று மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டன.

இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் பங்குபற்றினர். (163)

## வடமராட்சியில் ஈக்களை ஒழிக்க நடவடிக்கை

(நெல்லியடி)

தொற்றுநோய்களை உருவாக்கி இதனுல் மக்களை நோயாளிகளாக்கும் ஈக்களின் தொல்லையை ஒழிப்பதற்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கண்காணிப்பின் பேரில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

இதன் முதற்கட்டமாக, வடமராட்சி கிழக்கு அகதிகள் முகாமில் 'டிபரெக்ஸ்,' என்னும் நச்சுமருந்து விசிறப்படவிருக்கின்றது.

சுழற்சி முறையில் நடைபெற உள்ள இவ் ஈக்கள் ஒழிப்பை, வடமராட்சியிலுள்ள வைத்தியசாலைகள் மூலம், அவ்வப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த இருப்பதாக சுகாதாரப்பரிசோதகர் அறிவித்துள்ளதாக பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு.எஸ். கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார். (160)

## வடமராட்சி கிழக்குக்கு நோர்வே செஞ்சிலுவைச் சங்கக் குழு விஜயம்

(தாளையடி)

நோர்வே செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஆகியோர் அண்மையில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு விஜயம் செய்து இடம் பெயர்ந்துவந்து தற்காலிக வதிவிடக்குடிசைகளில் தங்கியிருந்த மக்களின் குறைகளை கேட்டறிந்தனர்.

நோர்வே செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழுத் தலைவர் திரு. ஆர். இவான்ஸ், வைத்திய விவகார அதிகாரி திருநர்ஸ்நாசன்ஸ், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கொழும்புத் தலைமை அலுவலக பிரதிநிதி திரு. தயானதேவா, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைதலைவர், உபதலைவர், செயலாளர் ஆகியோரைக் கொண்ட குழு வடமராட்சி கிழக்கு பிரிவு அலுவலகத்திற்கு வந்து தையல் பயிற்சி வகுப்பு முதலுதவி, வகுப்பு, நடமாடும் வைத்திய சேவை ஆகியவற்றை நேரில் பார்வையிட்டனர்

இதுபோல் நாகர்கோவிலில் நடமாடும் வைத்திய சேவை, முதலுதவி பயிற்சி வகுப்பு ஆகியவற்றையும் பார்வையிட்டனர்.

இடம் பெயர்ந்து வந்து இப்பகுதியிலுள்ள கடற்தொழிலாளர் குடும்பங்களைச் சந்தித்து தொழில் செய்வதற்கு வேண்டிய மீன்பிடி உபகரணங்களை சங்கங்கள் மூலம் தருவதாகக் கூறினர்

மருதன்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு விஜயம் செய்த குழுவினர் வைத்திய சாலைத் தேவைகளைக் கேட்டறிந்தனர் (163

## கட்டாக்காலி நாய்களை பிடிக்க நடவடிக்கை

(உடுவில்)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிப்பின் பேரில் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கட்டாக்காலி நாய்களைப் பிடிக்கும் வேலைகள் நடைபெறவுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரின் ஒத்துழைப்போடு அகதி முகாம்களை அண்டிய பிரதேசங்களில் கட்டாக்காலி தெருநாய்கள் பிடிக்கப்படவுள்ளன.

அகதி முகாம்களில் இத்தெரு நாய்களின் தொல்லைகள் அதிகரித்திருப்பது பற்றி சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டதைதொடர்ந்து கட்டாக்காலி நாய்களைப் பிடிக்குமாறு அவர் பணித்துள்ளார். (109)

## தளபாட வசதிகள்

(வேலணை)

சனசமூக நிலையங்களால் நடாத்தப்பட்டு வருகின்ற பாலர் பாடசாலைகள் ஒவ்வொன்றுக்கும் தளபாடவசதிகள் அளிக்கப்படவுள்ளது.

இத்திட்டம் அடுத்த வருடமான 1993-ம் வருடத்தில் இருந்து அமுலுக்கு வரவுள்ளது. (75)

## ★ இந்தியப் பிரதமர் ராவின் பதினாறுமாதகால ஆட்சியில் உருப்படியாக எதுவும் செய்யவில்லை

(புதுடில்லி)

இந்தியாவின் பிரதமர் திரு. நரசிம்மராவ் பதவி ஏற்று 16 மாதங்கள் கடந்து விட்டபோதிலும் இந்தியாவில் எழுந்துள்ள எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு காணாது மிகசாதுரியமாக தமது பதவியை காப்பாற்றிக் கொண்டு வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள்.

இந்தியாவின் பிரதமர் பதவியையும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவி போன்ற இருமுக்கிய பதவிகளை வகித்து வரும் பிரதமர் ராவ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கோ அல்லது மாநிலங்களிடையே ஏற்பட்டுள்ள பிரச்சனைகளுக்கோ இதுவரை உருப்படியாக ஒரு தீர்வையும் காணவில்லை.

தமிழ்நாடு – கர்நாடக மாநிலங்களின் தண்ணீர்ப் பிரச்சனை, காஷ்மீர் பிரச்சனை, பாகிஸ்தான் – இந்தியா எல்லைப் பிரச்சனை, பங்குமார்கட்டு மோசடி, பாபர் மசூதி பிரச்சனை, கர்நாடகா இந்திரா காங்கிரஸ் பிரச்சனை, ஆந்திர மாநில காங்கிரஸ் கோஷ்டி சண்டை, தமிழ்நாடு அ. தி. மு. க. – காங்கிரஸ் பூசல்கள் உட்பட பல பிரச்சனைகள் இந்தியாவில் தற்போது தலைதூக்கியிருந்த போதிலும், இவற்றில் ஒன்றுக்கேனும் கடந்த 16 மாதங்களில் தீர்வு எதையும் அவர் கண்டதில்லை.

இதே நேரத்தில் பிரதமர் நரசிம்மராவின் இந்த 16மாத ஆட்சியில் அவரின் மகன், மகள், உறவினர் ஆகியோரின் அடாவடித்தனமும், அதிகார துஷ்பிரயோகமுமே தலைதூக்கியுள்ளதாக, அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளார்கள். (வி)

## ஜனாதிபதி பிரேமா ஏபிரகாம் லிங்கன் போன்றவர்

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஏப்ரகாம் லிங்கன் போன்றவர் என்று புரொன்டிலைன்' சஞ்சிகை அதன் 6-ம் திகதி இதழில் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அந்தக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

அரசியல் செயல் முறையைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி பிரேமதாசா ஏப்ரகாம் லிங்கனைப் போன்று செயல்படுகிறார்.

பிரேமதாசா கர்ஜிக்கின்ற வெறிபிடித்த சிங்கம் போன்றிருப்பார் என எதிர்பார்த்தவர்கள் நிச்சயமாக அதிர்ச்சியடையவே செய்வர்.

உள்நாட்டு விவகாரம் தொடர்பாக அவர் பின்பற்றும் கொள்கைகளிலும் அறிவித்தல்களிலும் புதிதாகக் கற்றுக் கொள்ளவும் மாற்றிக் கொள்ளவும் இயலாதவர் அல்லர் என்பது அவரது செயல்கள் உணர்த்தி நிற்கின்றன என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (இ)

## ★ ஜேர்மனியில் தங்கியுள்ள வெளிநாட்டு அகதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கமுடிவு

(பொன்)

தமது சொந்த நாடுகளில் ஏற்பட்ட அரசியல் பிரச்னைகளுக்கு முகம் கொடுக்காத அனைவரும் தமது சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று ஜேர்மனியன் பிரதமர் திரு. ஹெல்மட்கோல் அறிவித்துள்ளார்.

இதுபற்றி பிரதமர் திரு. ஹெல்மட்கோலின் அதிகாரி ஒருவர் கருத்து தெரிவிக்கையில், ஜேர்மனியில் தற்போது 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் அரசியல் தஞ்சம் கோரியுள்ளார்கள். இவர்களில் பெரும்பாலானோர் பணம் தேடும் நோக்குடனே இங்கு வந்துள்ளார்கள்.

1991-ம் ஆண்டு 2 லட்சத்து 56 ஆயிரம் வெளிநாட்டவர் அரசியல் தஞ்சம் கோரியிருந்தனர். தற்போது இது இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. இதனால் உள்நாட்டில் பெரும் பிரச்னைகள் ஏற்படப் பார்க்கின்றது.

அரசியல் தஞ்சம் கோரியுள்ளோர் விடயத்தில் ஜேர்மன் அரசு வருங்காலத்தில் கடும் சட்ட நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (வி)

## தமிழக அரசு வழக்கு தாக்கல்

(சென்னை)

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 8-ந் திகதி இந்தியக் கடற்பகுதியில் தஞ்சாவூருக் கருகில் கைப்பற்றப்பட்ட "டொங்கோவா" என்ற கப்பலில் இருந்தவர்கள்மீது தமிழ்நாட்டில் பொலிசார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனரென்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கப்பலில் இலங்கைத் தமிழர் சிலர் இருந்ததாகவும் இக்கப்பலில் புலிகளுக்கு ஆயுதம் கொண்டுவரப்பட்டதாகவும் தமிழக அரசு கூறியுள்ளது. (சு-சி)

## இலக்கத் தகடு விநியோகம்

(திருநெல்வேலி)

நல்லூர் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளை வீதிகளில் விநியோகித்து வருகிறார்கள். (157)

## அகதிகள் முகாமுக்கு மருத்துவ வசதி

(கொழும்பு)

தமிழ்நாட்டிலிருந்து நாடு திரும்பும் அகதிகளை தங்க வைப்பதற்கென ஆசிக்குளம் பகுதியில் அமையவிருக்கும் பாரிய முகாமுக்கு மருத்துவ வசதிகளை வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் முன்வந்துள்ளது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மடுப்பகுதிகளில் வாழும் மக்களின் நிலைமைகளையும், அவர்களுக்கு அளிக்கப்படவேண்டிய வசதிகளையும் ஆராய்வதற்காக இங்கு வந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளன வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்துள்ளனர். (இ)

### வரி குறைப்பு

(கொழும்பு)

புதிய வரவு செலவுத்திட்டத்தில் சீனி, செத்தல் மிளகாய், சோயா அவரை, தகரத்தில் அடைக்கப்பட்ட மீன், மீன், சவர்க்காரம், சிந்தடிக் புடவைகள் ஆகியவற்றின் வரி 15 சத வீதத்திலிருந்து 10 சத வீதமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. (இ)

## தபால்களை சேர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் 9ம் திகதி மாலை அல்லது 10-ம் திகதி காலை கொழும்பு புறப்பட இருப்பதினால் 9ம் திகதி காலை 7மணிக்கு முன்னதாக வெளி இடங்களுக்கான தபால்களை யாழ். தபால் நிலையத்தில் சேர்க்குமாறு யாழ். தபால் நிலையம் அறிவித்துள்ளது. (வி)

### வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமும் வடக்கு-கிழக்கு இணைப்பை ஏற்றுக்கொள்ளாத ஒரு யோசனையாகவே அமையுமெனவும் எனினும் இவ்வருட இறுதிக்குள் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுவிடுமெனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)


## கண்ணீர் அஞ்சலி

### T. P. பத்மநாதன்

யாழ். பல்கலைக்கழக உதைபந்தாட்ட அணியின் பயிற்றுவிப்பாளர் திரு தில்லையம்பலம் பொன்னுத்துரை பத்மநாதன் (T P. மாஸ்ரர்) கடந்த 06-11-92 அன்று இரவு காலமாகிவிட்டார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத்தருகின்றோம். யாழ். பல்கலைக்கழக அணி அகில இலங்கை பல்கலைக்கழக ரீதியில் சாதனை புரிவதற்கு முன்னின்று உழைத்த அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிக்கின்றோம் இவரது இழப்பில் துயருறும் குடும்பத்தவர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழக
உதைபந்தாட்ட அணி அங்கத்தவர்கள்.

(சி-6957)



இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 8ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8


### டாக்காவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரி பேகம் காலிதா ஷியா நேற்று இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு தமது நாட்டின் வெளிவிவகார அமைச்சர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். (வி)

### மட்டக்களப்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாகும்.

கிழக்கில் புலிகளின் பலம் பெருமளவில் அதிகரித்து வரும் இவ்வேளையில் இதனை ஏதாவதொரு விதத்தில் தடுக்க வேண்டுமென படையினர் பகிரதப் பிரயத்தனம் மேற்கொண்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி-வி)

### முப்படைகளும்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கள் தெரிவித்தன.

இதேவேளை தெற்கிலிருந்து பெருமளவு படையினர் வடக்கே அனுப்பப்பட்டுள்ளதும் தெரிந்ததே. (சு-சி)

### வங்கிப் பரீட்சை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பரீட்சை வினாத்தாள்களை கொழும்பிலிருந்து அனுப்பி வைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளபோதும் யாழ் கல்விப் பணிப்பாளர் இதுவிடயமாகவும் க.பொ த. சாதாரணதர (டிசம்பர்) பரீட்சை விடயமாகவும் இவ்வாரத்திற்குள் கொழும்பு செல்ல உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (157)

### யுத்த இழப்பை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பது இறந்தால் கூட்டுப்படைத் தலைமையகம் இறந்தோர் எண்ணிக்கை 8ஆக இருக்குமென்று கூறுகின்றது என்று அந்தப்பத்திரிகை குற்றம் சாட்டியுள்ளது

அண்மைக்காலமாக இவ்வாறாகவே உயிரிழந்த படையினர் தொகையை பெருமளவில் குறைத்துக் கூறிவருவது வழக்கமாகிவிட்டதாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது. (சு)

### தனியார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொலநறுவையிலிருந்து ஏறாவூர் நோக்கிச் சென்ற இந்த பஸ் வண்டி செங்கலடியில் கண்ணியில் சிக்கியதால் சாரதி ஒருவரும் பயணி ஒருவரும் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் பற்றிய மேலதிக விபரமெதுவும் தெரிவிக்கப்படவில்லை. (சி-வி)

### மாணவர்களை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

'யுக்திய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கேணல் தரத்தில் உள்ள அந்த அதிகாரி பிரிகேடியர் தரத்துக்கு பதவி உயர்வு கொடுத்திருப்பது ஆச்சரியமாக இருக்கின்றது. என்றும் அந்தப்பத்திரிகை மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

ஏற்கனவே இந்தச் சம்பவத்தை சர்வதேச மனித உரிமைகள்குழு குறைகூறியுள்ளதுடன் இதுகுறித்து விசாரணைகளை நடாத்தி மாணவர்களின் நிலைபற்றி கூறுமாறு அரசை நெருக்கடி செய்தும் வருகிறது. (சு-சி)

### விமானத்தாக்குதல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குண்டு வீசுத் தாக்குதல்கள் ஷெல்லடிகள் இடம் பெறுதிருப்பது அவசியமாகும்

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை பொன்றின் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகல வழிகளிலும் அழிவின் விளிம்பில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களை காக்கவும் அவர்கள் நிம்மதியாக வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி பிரேமதாசா துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பத்திரிகை கோரியுள்ளது. (சு)

### யுத்ததந்திரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் வெளியிடுவது படை நடவடிக்கைக்கு பெரும் குந்தகமாக அமைகிறதாம்.

இதையடுத்தே இராணுவ நடவடிக்கைகள் குறித்த செய்திகளை வெளியிடுவதை தவிர்க்குமாறு அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனராம். (சி)

### இவ்வருடம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையிலிருந்து தப்பிச்சென்றவர்களின் தொகை அதிகரித்துள்ளதாகவும் அச்செய்தி மேலும் குறிப்பிட்டுள்ளது

இதேவேளை இவர்களை மீண்டும் படைகளில் சேர்க்கும் முயற்சி இதுவரை எதுவித பலனையும் தரவில்லையெனவும் கூறப்படுகிறது. (சி)

### புலிகளின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் படையினரின் பலம் குறைந்துள்ளதெனவும் இதனால் புலிகளின் தாக்குதல் அதிகரிக்கலாமெனவும் அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு தாக்குதலிலும் நூற்றுக்கணக்கான புலிகள் ஈடுபட்டு வருவதாகவும் இப்பகுதியில் புலிகளின் ஆட்பலம் அதிகரித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

### நள்ளிரவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இளவாலைப் பகுதியிலிருந்து தினமும் நள்ளிரவு வேளையில் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி மோசமான ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றுவருகின்றன

குடியிருப்புகளிலிருந்து மக்களை வெளியேற்றும் நோக்கிலும், உளரீதியில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும்நோக்கிலேயே நள்ளிரவு வேளையில் படையினர் ஷெல் தாக்குதலை மேற்கொள்வதாக கூறப்படுகிறது. (சி)